**– 20.7.2009**

# கேபிள் டி.வி.க்கு வரி விலக்கு! ரூபாய் 20 கோடிக்கு மேல் நிலுவை வரி ரத்து! கேபிள் டி.வி. ஆபரேட்டர்கள் நல வாரியம் அமைப்பு! ஏற்கனவே ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன!

## தமிழக அரசு அறிவிப்பு!

கேபிள் டி.வி.களுக்கு வரி விலக்கு அளித்தும், நிலுவையாக இருந்த கேளிக்கை வரியை ரத்து செய்தும், கேபிள் டி.வி. ஆபரேட்டர்கள் நல வாரியம் அமைத்தும் தமிழக அரசு ஏற்கனவே ஆணை பிறப்பித்துள்ள நிலையில், இவை குறித்து அரசாணைகள் இதுவரை வெளியிடப்படாததுபோல தவறாகக் கூறி, கேபிள் டி.வி. ஆபரேட்டர்கள் பேரணி நடத்தவிருப்பதாக இன்றைய தமிழ் நாளிதழ் ஒன்றில் செய்தி வெளிவந்துள்ளது. இது தொடர்பாக, ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள அரசாணைகள் விவரம் பின்வருமாறு:

கேபிள் டி.வி. ஆபரேட்டர்கள் மாநாடு சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் 12.9.2007 அன்று நடைபெற்றபொழுது அம்மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கேபிள் டி.வி.க்கான கேளிக்கை வரிக்கு விலக்கு அளிக்கப்படும் என்றும், கேபிள் டி.வி. ஆபரேட்டர்களுக்குத் தனி நலவாரியம் அமைக்கப்படும் என்றும் அறிவித்தார். அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து 2008 – 2009 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் 1.4.2008 முதல் கேபிள் டி.விகளுக்கு வரி விலக்கு அளிக்கப்படும் என்றும், 31.3.2008 வரை நிலுவையில் உள்ள கேபிள் டி.வி. மீதான கேளிக்கை வரி முழுவதும் தள்ளுபடி செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்புகளின் பயனாக கேபிள் டி.வி.களுக்கு 1.4.2008 முதல் வரி விலக்களித்து 27.3.2008 அன்று தமிழக அரசு ஆணையிட்டது; அந்த ஆணையின் தொடர்ச்சியாக 3 ஆயிரத்து 926 கேபிள் டி.வி. ஆபரேட்டர்களுக்கு 31.3.2008 வரையில் நிலுவையிலிருந்த மொத்தம் 20 கோடியே 13 இலட்சத்து 94 ஆயிரத்து 694 ரூபாய் வரி தள்ளுபடி செய்து 19.12.2008 அன்று ஆணையிடப்பட்டு, கேபிள் டி.வி. ஆபரேட்டர்கள் பயனடைந்துள்ளனர். அத்துடன், தமிழ்நாடு கேபிள் டி.வி. ஆபரேட்டர்கள் நல வாரியம் அமைத்திட 28.3.2008 அன்று ஆணையிடப்பட்டது. இந்த நல வாரியத்திற்காக நடப்பாண்டில் 50 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது. இந்த விவரங்களை அறிந்துகொள்ளாமல் இவைதொடர்பான அரசாணைகள் வெளியிடப்பட வேண்டுமெனக் கூறி கேபிள் டி.வி. ஆபரேட்டர்கள் பேரணி நடத்தவிருப்பதாகச் செய்தி வெளியிட்டிருப்பது தேவையற்றது எனத் தமிழக அரசு அறிவித்துள்ளது.

* * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9